
உமா பிக்சர்ஸ்
உதயணன்
வாசவதத்தா
டைரக்ஷன்
T. R. ரகுநாத்
ஸ்டுடியோ
நாஸ்
ரிலீஸ்

*Film Credits of:*

## UDAYANAN VASAVADATTA

| | |
|---|---|
| Producer: | RM. RAMANATHAN. |
| Story: | RAJA CHANDRA SEKAR. |
| Dialogues: | "UDAYAKUMARAN" B.A. |
| | A. S. A. SWAMY B.A., *(Hons. London)* |
| Songs: | PAPANASAM SIVAN. |
| | KAMBADASAN. |
| Dances: | KAMINI KUMAR SINHA. *(Manipuri. Kathak & Punjabi)* |
| | V. B. RAMIAH PILLAI. *(Bharatha Natyam)* |
| Photography: | MARCUS BARTLEY. |
| Audiography: | DINSHAW K. TEHRANI. |
| | T. T. ARASU. |
| Art Direction: | F. NAGOOR. |
| Processing: | A. T. HARIKRISHNAN. |
| | ETHIRAJ. |
| Make-up: | HARI PADA CHANDRA RAMDOSS, RAMACHANDRAN, DORAISWAMY & PARAMASIVAN. |
| Costumes: | M. NATESAN. |
| Music Direction: | C. R. SUBBARAMAN. |
| Orchestra: | (By Courtesy) H.M.V. |
| Editing: | A. KASILINGAM. |
| | S. A. MURUGESAN. |
| Production Management: | S. MAMUNDY ACHARIAR. |
| | D. GOPALASWAMY. |
| | K. SANKARAN NAIR. |
| Direction: | T. R. RAGHUNATH. |
| Associate: | V. NATARAJ. |

*Produced at:*

**NEWTONE STUDIOS LTD., MADRAS.**

*By and for*

**UMA PICTURES, MADRAS**

# உதயணன் வாஸவதத்தை.

## கதைச்சுருக்கம்.

**பூர்வகதை.**

கௌசாம்பியைத் தலைநகராகக்கொண்ட வத்ஸநாட்டு வேந்தன் **உதயணன்** யாழ்வாசிப்பதிலும், மதங்கொண்ட யானைகளை அடக்குவதிலும் தேற்சியுடையவன். பிறப்பு முதலாக அவன் பல இன்னல்களை அனுபவித்து தன் மாமன் **விக்ரனால்** முடிசூட்டப்பெற்று அரசு செலுத்தி வரும் நாளில், இந்திரனால் அவனுக்கு அளிக்கப்பட்ட தெய்வ யானை அரசன் செய்த *தவறினால் அவனை விட்டு நீங்கியது. தவறை நினைந்து ஆறாத்துயரத்துடன் அதைத் தேடி அலைந்து திரியலானான்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த எண்ணி உச்ஜையினியிருந்த அவந்தி நாட்டரசன் **பிரச்சோதனன்** மரத்தினாலொரு யானைசெய்து அதனுள் தன் வீரர்கள் பலரை இருக்கச்செய்து உதயணன் அதை நெருங்கும் சமயம் சிறைப்பிடித்தான்.

பிரச்சோதனன் செய்த சூழ்ச்சிக்கு பழிவாங்க எண்ணியும் தமது அரசரை மீட்கவும் கருதி உதயணனின் அமைச்சன் **யூகந்தராயன்** முதலியோர் மாற்றுருக்கொண்டு உச்ஜைனி நகரத்தை அடைந்தனர்.

பாஞ்சாலராஜன் **ஆருனி**யென்பவன் இதேசமயத்தில் வத்ஸநாட்டை தந்திரமாக தன்வசப்படுத்திக்கொண்டான். நாட்டை இழந்த மந்திரிகள் பல சூழ்ச்சிகளைக்கையாண்டனர். உச்ஜைனி அரசன் பட்டத்து யானை **நளகிரி**க்கு மதமூட்டி நகரத்தைச் சூறையாடவிடுத்தனன். அதையடக்க வகையறியாத பிரச்சோதனன் சிறையிலிருந்த உதயணனிடம் அபயம் கேட்க அவன் அதை அடங்கச் செய்தான். அது முதல் அவந்தி நாட்டு அரசிளங்குமாரர்களுக்கு வில், வாள் முதலிய பயிற்சிகளை கற்றுக்கொடுக்கவும், அரசகுமாரி **வாஸவதத்தை**க்கு யாழ்வித்தை கற்பிக்க

வும பிரச்சோதனன் உதயணனிடம் கேட்டுக்கொள்ள, சமயத்தை எதிர்பார்த்த உதயணனும் ஒப்புக்கொண்டான்.

நாளடைவில் அரசகுமாரி வாஸவதத்தைக்கும் உதயணனுக்கும் காதல் வளர்ந்தோங்கியது. உதயணன் தன் நிலையையும், நாட்டையும் மறந்தான். ஆனால்? மந்திரிகள் நகரத்தில் நீர்விழாக்கொண்டாடச்செய்து, அனைவரும் நகரைவிட்டு வெளியேறிய சமயம் கொள்ளைக் கூட்டத்தை வுவி நகரைத் தீமூட்டச்செய்தனர்.

அது சமயம் பிரச்சோதனன் வாஸவதத்தையை உதயணனிடம் ஒப்படைத்து, நகரத்திற்குள் செல்ல, **பத்ராவதி** எனும் யானைமேல் அமைச்சரில் ஒருவரான **வயந்தகன்,** வாஸ்வதத்தையும், உதயணனையும் அவந்தியைவிட்டு அப்புறப்படுத்தினான். இதையறிந்த பிரச்சோதனன் சேனைகள் பின்தொடர அதைப்புறங் காட்டி ஓடச்செய்தான், வழியில் உதயணன் கோடபதி என்ற யாழையும் இழந்தான். தன் அமைச்சரில் ஒருவனான **உருமண்ணுவா**விடம் ஒப்படைத்திருந்த இலாவாண நாட்டின் தலை நகராகிய ஜயந்தியை அடைந்து வாஸவதத்தையை மணம் செய்துகொண்டு வத்ஸ நாட்டை மீட்கும் கவலையே இல்லாது காதலில் ஈடுபட்டிருக்கையில் நம்கதை ஆரம்பமாகியது.

* * *

**ஊர்வம்பு:-** ஜயந்திவாசிகள் அரசன் இன்பவாழ்வில் மயங்கி இருப்பதைப்பற்றி பலர் பேசுகிறார்கள். காதலர்கள் இருவரும் நந்தவனத்தில் உல்லாசமாய் இருக்கிறார்கள்.

**மந்திரிகள் ஆலோசனை:-** அந்தரங்க அறையில் அரசரின் பிறப்பு வளப்பையும் தற்போது அவர்போகும் போக்கையும் சூழ்ச்சியில் தீரனான யூகந்தராயன் எனும் யூகி மற்ற அமைச்சர்களுடன் ஆலோசித்து தீவிரமான ஒரு

முடிவுக்கு வரும் சமயம் ஒரு தோழியினால் தற்போது அரசன் இருக்கும் நிலையைத்தெறிந்து அங்கு செல்கிறான். சென்றவன் கௌண்டில்யமுனிவர் தரிசனத்திற்கு புறப் படவேண்டுமென்று சொல்லி வழியில் யூகி இறந்ததாக மற்றொரு மந்திரி உருமண்ணுவாவின் மூலமாக அரசருக் குத் தெரியச்செய்கிறான்.

அரசன் யூகியை நினைத்து வருந்த ஆச்ரமத்தில் முனிவர் அரசனைத்தேற்றுகிறார். அதேசமயம் வாஸ வதத்தை தங்கியிருந்த மாளிகை தீப்பற்றியதாகவும் வாஸ வதத்தை உள்ளே இருந்ததாகவும் தெரிவித்தான் வயந்த கன். உதயணன் தன்னை மீறிய துக்கத்தால் பேசவும் சக்தி யற்றவனாகிவிடுகிறான். இருப்பதா இறப்பதா வாழ்க்கை யின் மீது வெறுப்புக்கொண்ட உதயணன் இறக்கவும் துணிகிறான் ஆனால்? அதுசமயம் வழிப்போக்கன் ஒருவன் ஆறுதல் மொழிகளைக் கூறி மகதநாட்டிற்கு அழைத்து செல்கிறான் இதுவும் மந்திரி யூகியின் சூழ்ச்சியே.

வாஸவதத்தையோடு வெளியேறிய மந்திரி யூகி மற் றும் உள்ளவர்கள் பலவிதமாக தேற்றியும் வாஸவதத்தை இவர்களிடம் வெறுப்பாகவே இருந்துவந்தாள்.

**காமன் கோவிலில்:**—அரசன் மகதத்திற்கு போவதாக தெரிந்த யூகி முதலானவர்கள் வாஸவதத்தையுடன்நாமும் அங்கு போகவேண்டுமென தீர்மானித்து புறப்படுகிறார்கள் மகதம் வந்த மன்னன் அங்குள்ள காமன் கோவிலில்தங்க மன்னன் அறியாதபடி மற்ற மந்திரிகளும் இருந்துக் கொண்டு வேண்டிய உதவியை செய்துவரும் நாளில்,

அவ்வூர் அரசன் **தருசகன்** சகோதரி **பத்மாவதி** காமன் கோவிலுக்கு வர மன்னரைக்கண்டதும் மயங்கி மாயமாக அந்தப்புரத்திற்கு அழைத்துச்சொல்கிறாள். இதை யறிந்த மந்திரிகள் அதே அரசன் தருசகனிடம் வேலைக்க மர்ந்து உதயணனுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் பாது காத்து வருகிறார்கள்.

திடுக்கிடும் சம்பவங்கள்:- மந்திரி யூகி உதயணனை ஏகசக்ரவர்த்தியாக்க முயற்சித்து மற்ற மந்திரிகளுடன் ஆலோசனை செய்து அரசர் இழந்த காதலை திரும்பவும் பெறச் செய்கிறான். ஆனால்? வாஸவதத்தையின் நினைவாய் மனம் நிம்மதியில்லாது இருக்க ஒருநாள் அந்தபுரத்தில் உதயணன் யாழ்வாசிக்கும் சமயம் எதிரொலிகேட்டு அரசன் எழுந்து ஓடுகிறான். நந்தவனத்தில் ஒரு பிராமணச் சிறுவன் யாழ்வாசிப்பதைக்கண்டு அது தன்னுடைய தென்று அச்சிறுவனுக்கு கூறி வேண்டிய பொருளைக் கொடுத்து மீண்டும் யாழை அடைகிறான்.

அதே சமயம் இழந்த மந்திரி யூகியும்வர அரசனுக்கு அளவில்லாத ஆனந்தம் உண்டாகிறது. ஆனால்? வாஸவதத்தையின் நினைவு மறக்க முடியவில்லை. மதிமந்திரி யூகியின் சூழ்ச்சியால் வாஸவதத்தையை அவந்திகா என்ற பெயருடன் பத்மாவதியிடம் பணிப்பெண்ணாக இருக்கச் செய்கிறான்.

அவந்திகாவை வாஸவதத்தையோ என்று உதயணன் சந்தேகித்து அவளை இரகசியத்தில் சந்திக்க பலதடவை முயற்சித்து-கடைசியில் நந்தவனத்தில் சந்திக்க இதை யறிந்த பத்மாவதி-வெருண்டு எழுந்தாள்-சீற்றம் கொண் டாள்-மன்னனையே குற்றத்திற்கேற்ற சிக்ஷை விதிக்கவற் புறுத்தினாள். குற்றவாளி தன் சிகையை இழக்க நேரிட வேண்டுமென்ற தீர்ப்புகூறப்பட்டது-தீர்ப்பின் விசித்திரமும்-அதை நிறைவேற்றிய விதமும்-வெள்ளித்திரையின் விநோதமுடிவு.

சுபம்.

## 1. ஜயந்தி வாசிகள் :

ஓம் உலகெலாம் துயிலெழ
குணகடல் எழும் ஆதவனே நமோ நமோ !

உதயணன் மங்கள வாழ்வுற
அருள்புரி ஜெயபாஸ்கரனே நமோ நமோ !

ஆடல்பாடல் மூழ்கி தன்னை மறந்தார்
அரசியின் காதல் வலையில் வீழ்ந்தார்!

அவருக்கென்ன மஹாராஜன்
அரசனுக் கொன்றும் கடமைகள் இல்லையா ?

அவர் கனவெல்லாம் குடிகள் நலமே
அல்லும் பகலும் காதல் கனவே !

அவனியில் இளைஞர்க்கியல்பிதுவே
அளவு கடந்தால் அமுதும விஷமே !

## 2. வாஸவதத்தை:

குதூஹலம்! தென்றல் வீசும் இந்நேரம்
குதூஹலம்! வந்தணைவாரென் மனோஹரன்.

நெஞ்சிலே கர்வமேனோ ?
மாமரம் தன்னையே கலந்தாய் !
மல்லிகைக் கொடியே உன்போல்
நானுமென் அன்பர் மார்புடனே
சேரேனோ ? ... ... ... (குதூ)

மலர்ந்த கமலமே — உன்
மதங்குலையுமென் — நாதன்
வதனந்தனில் கூர் இதழ்
விழியையும் கண்டே ... (குதூ)

## 3. உதயணன் :

வடிவின் நிழல் போன்றது ... காதல் !
மணியினொளி போன்றது ... காதல் !
உடலின் உயிர்போன்றது ... காதல் !
உள்ளூறி இனிக்கும் அமுதே... காதல் !
ஈருடல் ஒருயிர் ஆவதே ... காதல் !
இந்திர போகமே தெய்வக் ... காதல் !
உயர்ந்த நவநிதி உண்மைக் ... காதல் !
உயிர்களின் யோகசமாதியே ... காதல் !

## 4. உதயணன் — வாஸவதத்தை.

உ: தந்தியிலெழுவது நாதம்—இழைந்த
தந்தியிலெழுவது நாதம்-
வா: கனிந்த—சிந்தையிலெழுவது காதல்!
உ: நாதத்திலே பிறந்து வளர்வது காதல்
வா: காதலால் மலர்ந்து கமழ்வது நாதம்!
உ: தெய்வீக காதலும் நாதமும் ஒன்றே.
வா: ஒருக்கால், நாதமும் ஜீவனும் ஒன்றே
உ: } காதலும் நாதமும் போலே—ஒன்று
வா: } கலந்திருப்போம் இன்னருளாலே!
உ: நீயே யாழின் நாதம்!
வா: நீரென் காதல் பிரஸாதம்!!

## 5. உதயணன்.

(விருத்தம்.)

வானந்தனிலே படையெடுத்த
மதயானைபோல் கார்முகில்கள்,
சோனை பொழிந்து மலைச்சரிவில் தாங்க,
வானின் முகடளந்து தேனைப்பெருக்கும்
பலாவுடன், மா, தேக்குமுதலாம் மரமடர்ந்து,
கானின் இயற்கை எழில் காண,
கண்களிரண்டு போதாதே!

## 6. உதயணன்.

தனியன் ஆனேனே
தாரணியில் நானே!

கனியனைய மொழியாள்
வாஸவதத்தையையும்
மந்திரி தனையும் பிரிந்தேன்
துணை வேறில்லா ... (தனி)

உயிர் சோருதே யாரோடு சொல்வேன்
உலகமெல்லாம் என்மேல் பழிகொண்டதோ?

குயிலிசையும் வேம்போ, குளிர்தென்றல் அரவோ,
குருடன் ஆனேனே, ஆறுதல்யார் ... (தனி)

## 7. பத்மாவதி (நடனம்)

வெண்ணிலா குடைபிடிக்க, தென்றல்
வெண் சாமரம் வீச

பண்பாடிக்கோகிலம் கட்டியம் கூற
பசுங்கிளிமேல் பவனியே வரும் மதனா!

வானவில் போலே, கரும்பாம் தனுவால்,
தேனூறும் ஐம்மலர் வாளி!

விழி, நெஞ்சம், கொங்கை, உயிரில், மலரில்,
வேகமுடனே பாயுதே!

சகியேன் கனியிதழ்ச், சுவைதா
சரஸம், பெறவே, சமயமே ... (வெண்)

## 8. பத்மாவதி - மாணகன்

ப : கண்ணால் பேசிப்பேசி—இன்பக்
காதல்தந்த மாரன் !
இன்னமும் வந்திடக் காணேன்
துடித்தேங்குதே என் நெஞ்சம் !

இரவு நேரமுமாச்சு—ஊர்
இறைச்சலடங்கிப் போச்சு
மீட்டிடாத யாழ் போல்—நான்
விழிக்கும் வினையிதென்ன ?

மா : பூவை மறந்த வண்டு—கார்
புயலை மறந்த மின்னல்
பேடை மறந்த அன்றில்—இந்தப்
பாரில் கண்டதுண்டோ ! ?

ப : கண்ணில் ஒளியதின்றேல்—இங்கு
காட்சி யெனபதேது ?

மா : கண்துயிலா போது—இன்பக்
கனவின் மோஹமேது ?

ப : உண்மை !

மா : உண்மைக்காதல் !!

ப : } காதலென்னும் உலகில் நாம்
மா . } கலந்து என்றும் வாழ்வோம் !

## 9. வாஸவதத்தை :

எந்தன் நாதன் ஏன் மறந்தார்
என் செய்வேன் ! என் செய்வேன் ?
தாமரை நீர் போலே நானே
ஏங்கினேன் ! ஏங்கினேன் !
அல்லும் பகலும் எந்தனுள்ளம்
நொந்ததே ! நொந்ததே !

எந்தன் அன்பரின் வதனபிம்பமே
கண்ணாரக் காண்பேனோ ?
வாழ்விலே இன்பம் வராதோ ?
அம்பிகே ! அம்பிகே !

முன்னமே நான் என் செய்தேனோ
தீவினை ! சோதனை !

## 10. உதயணன் :

ஆனந்தம் என் சொல்வேன் !
என் மனது இன்றடையும்... (ஆ)

கானும்ருதம் தரும் தாய் நேர் உன்னை
நானின்று கண்டேன்—இன்பங் கொண்டேன்

உன் தெய்வ அன்பினை என்னென்பேன்
உயிரில் சிறந்த எந்தன் கோடபதி !
என் தெய்வம் நீயே இன்பமும் நீயே
என் இருகண்ணால் உன்னைக் கண்டேன்

காதலென்ற மதலாகிரி வசமாய்
கலையின் அமுதமுனை மறந்தேன்
கனிந்து வரும் தாயெனவே
எனது பிழையை நீ மறந்தே
அன்பாய் எனையடைந்த... (ஆ)

## 11, உதயணன்.

செந்திரு வனையாள் வாஸவதத்தை
திகட்டாத தேன்மொழியாள்
கயல் விழியாள் ... (செ)

சிந்தை கவர்ந்திடு தளர்பிடி நடையாள்
சிங்கார மனோஹர புன்னகையுடையாள்

கருத்தில் வேறொன்றிற்கு மிடமின்றி
ஒன்று கலந்து யாழுடன் இசைபாடுவாள்
காண்பதுமவளுரு கேட்பதுமவள் குரல்
கனவிலும் வந்து விளையாடுவாள் ... (செ)

## 12. அவந்திகா (நடனம்)

(a) பாதம் துணை தேவா! அன்பாலே
பூதல ஜீவாதாரமான ... (பா)

* * * *

(b) ஏங்கி, ஏங்கி;
ஆடும் சீர் வாரித் திரைதான்
காரிருளில் — ஆடும் சீர் வாரித் திரைதான்
பூங்காவின் கோகிலம் போலே
பண்பாடி, மெய் அன்பாலே ஓடி,
பொங்கிடும் பூர்ணிமை
பொன் முகம் தேடி நல் இங்கீதம் பாடி,
நம்பிக்கையாலே கண்ணீர் முத்தம் சிதறி
ஏங்கி; ஏங்கி!

* * * *

(c) பார்! கண்ணுக்குள் வானம்!
வண்ண வெண்சந்திரன் தோணும்
இன்பத்தின் புன்னகை காணும்!
கண்கள் மூடி தூங்கினாலும்,
கொண்டல் கொஞ்சும் மின்னல் போலும்,
நானே சொப்பனத்தே வருவேனே!
பெண்ணுக்குள் விண்ணும் மண்ணும் தானே.

## 13. உதயணன்:—அவந்திகா:

(a) உ: பெண்களின் பிடிவாதம் பேருபத்து
சீதை
பொன்யான் விரும்பி அழிந்தாள் !

(b) அ: பொன்மானென்றும், மாயப்புன்மானென்றும்
உணரான்
ராமன் உண்மையறி வெங்கே ?

(c) உ: மாதர் மதிகொள்ளல் நிர்மூலமே
தங்கை
சொற்கேட்ட ராவணன்போல் !

(d) அ: மண்டோதரியின் மதிகேளாததால்
அன்றோ
மாண்டான் இலங்கை வேந்தன் !

(e) உ: கனவிலும் குறையாத பிரேமையினால்
இராமன்
தேவியை மீண்டடைந்தான் !

கோடபதி! என்னிடம் உனக்கும்
இரக்கம் குறைந்ததோ?
காடெங்கும் சென்று வென்று
புகழ்கொடி நாட்டினேன்
பகையோட்டினேன் !
நங்கை தன் கைப்பொம்மை போல்
எனை ஆட்டவும் விதியின் கோபமோ ?

## 14. உதயணன்:

தத்தைமொழி உயிர்தத்தையைக்
காண்பேனோ? சித்தப்ரமை தெளியாதோ?
உத்தம அன்புமிகும் தெய்வயானையும்
உடனிங்கு வாராதோ?

## 15. உதயணன்:

உறுதியுடையோர்க்கொரு நாளும்
அபாயமில்லையே! நெஞ்சில் (உறுதி)
நெறி தவறுதுலக வாழ்விலே
நிதான முடன் திடநம்பிக்கை கொண்டு (உறுதி)
இன்ப துன்பங்கலந்தது உலகம்
இரவு பகல்போல் சுழன்று வருமே
துன்பங் கண்டு கலங்கார் சோதனை
எதிலுமஞ்சாத தீரர் தளராத (உறுதி)

சுபம்.

# உதயணன்—வாஸவதத்தை

| | | |
|---|---|---|
| ஸ்ரீமான் G. N. பாலசுப்ரமணியம் | ... | உதயணன் / பாணகன் |
| ,, D. பாலசுப்பிரமணியம் | ... | தருசகன் |
| ,, காளி N. ரத்தினம் | ... | இசைச்சன் |
| ,, K. சாரங்கபாணி | ... | காகதுண்டகன் |
| ,, M. V. மணி | .... | யூகந்தராயர் |
| ,, N. கிருஷ்ணமூர்த்தி | .... | உருமண்ணுவா |
| ,, P. S. வீரப்பன் | .... | யெளந்தகன் |
| ,, V. நடராஜய்யர் | .... | இடவகன் |
| ,, T. K. சம்பங்கி | ... | அஸ்வகுப்தன் |
| ,, T. T. அரசு | ... | ஆருணியரசன் |
| ,, கௌளத்துமணி | .... | கௌண்டில்யர் |
| ,, N. நாகசுப்ரமணியம் | ... | பாலகன் |

மற்றும் பலர்

| | | |
|---|---|---|
| ஸ்ரீமதி R. வசுந்தராதேவி | ... | வாஸவதத்தை / அவந்திகா |
| ,, M. S. சரோஜா | ... | பத்மாவதி |
| ,, C. T. ராஜகாந்தம் | ... | யாப்பியாயினி |
| ,, K. N. கமலம் | ... | காஞ்சனமாலை |
| ,, K. N. ராஜம் | .... | ஐராவதி |

மற்றும் பலர்


உமா பிக்சர்ஸ்
உதயணன்
வாசவதத்தா
டைரக்ஷன்
T.R.ரகுநாத்
ஸ்டுடியோ
நாஸ
ரிலீஸ்
SEENU